# செயல்பாட்டுக் கொள்கைகள்

மேக்னாவில் நாங்கள் மேற்கொண்டு வரும் சர்வதேச தரத்திலான உற்பத்திப் பயணத்தில், ஊழியர்களும் நிர்வாகத்தினரும் பின்வரும் கொள்கைகளின் அடிப்படையில் இணைந்து பணியாற்றி செயல்பாட்டு உன்னதத்தைக் காண்கிறார்கள்:

## பணியாளர்மீது கவனம்

- எல்லா ஊழியர்களும் நிறுவனத்தின் அங்கம் என்பதை உணருங்கள்
- ஊழியர் சாசனத்தின் மதிப்பீடுகளை உறுதிப்படுத்துவதன்மூலம் ஊழியர்களை ஊக்கப்படுத்துங்கள், ஆற்றல் கொள்ளச்செய்யுங்கள், மற்றும் அவர்களுக்கு அதிகாரம் வழங்குங்கள்
- மக்கள்மீது கவனம் செலுத்துவதன்மூலம் ஊழியர்களைத் திருப்தியாக வைத்திருங்கள், மற்றும் ஊழியர்களின் பணி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுங்கள்.

## பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழல்

- அனைத்து ஊழியர்களுக்கும் பாதுகாப்பான, சுத்தமான, ஆரோக்கியமான பணிச் சூழல் வழங்கப்படுவதை உறுதி செய்யுங்கள்
- அனைத்துக் கருவிகளும் மற்றும் பணிச் சூழலும் பொருந்தும் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கொள்கைகளுக்குட்பட்டிருப்பதை உறுதி செய்யுங்கள்
- விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் வேலை நாள் இழப்புகள் போன்றவை இல்லாமல் இயங்கும் நமது இலக்கை நோக்கித் தொடர்ந்து பணியாற்றுங்கள்

## கைவினைத்திறமை மற்றும் மொத்தத் தரத்தில் பெருமை

- வாடிக்கையாளர்களை மையமாக கொண்டு இயங்குங்கள். வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்டு அதற்கு இணையாக, அல்லது அதைவிட மேலாகச் செயலாற்றுங்கள்
- "மொத்தத் தரம்" என்பதை வலியுறுத்தும் கலாசாரத்தை உயர்த்திப் பிடிக்கும்வண்ணம் ஒவ்வொரு செயல்முறையிலும் கவனம், பொறுப்பு மற்றும் ஒழுக்கத்தை நிலைநிறுத்துங்கள்
- பிழைகள் இல்லாது இயங்கும் நம் நோக்கத்தை ஆதரிக்கும்வண்ணம் எளிமையுடனும் சிறப்பாகவும் இயங்கும் பிழை தவிர்ப்பு முறைகளைப் பயன்படுத்துங்கள்
- நாம் செய்யும் ஒவ்வொரு வேலையிலும், பிழை செய்யாமல், பிழைகளை ஏற்றுக்கொள்ளாமல், மற்றும் பிழைகளைப் பிறருக்கு அனுப்பாமல் பார்த்துக்கொள்ளுங்கள்

## நேர்மை மற்றும் மரியாதை

- ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பிறருடன் பழகும்போதெல்லாம் நேர்மையாகவும் ஒருமைப்பாட்டுடனும் நடந்துகொள்ளுங்கள்
- அனைத்துச் செயல்பாடுகளிலும், மேக்னாவின் ஒழுக்க நெறிமுறைகள், நன்னடத்தைகள் மற்றும் பொருந்தும் சட்டங்களை எழுத்தளவிலும் செயலளவிலும் மதித்துப் பின்பற்றுங்கள்
- சரியான மற்றும் நியாயமான தொழில்முறை எது என்பதை தெரிந்துகொள்வதற்கு விவேகத்தையும் ஆய்ந்தறியும் குணத்தையும் பயன்படுத்துங்கள்

## செயல்திறன்

- செயல்திறனிலும் மற்றும் எப்போதும் உற்பத்தித் தரநிலைகள் மற்றும் வெளியீட்டுத் தேவைகளை எட்டுவதிலும் கவனம் செலுத்துங்கள்
- செயல்பாட்டு இலக்குகள், நோக்கங்கள் மற்றும் செயல்திறன் விவரங்களை ஆலையில் தெளிவாகக் காட்சிப்படுத்துங்கள், அதன்மூலம் எல்லோரும் அவற்றை அறிவார்கள், மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் இவற்றின் முன்னேற்றம் மற்றும் நிறுவனத்தின் இலக்குகளை எட்டுவதை நோக்கமாகக் கொண்டு அமையும்
- செயல்பாட்டு இலக்குகள் மற்றும் நோக்கங்களை எட்டுவதில் அனைத்துக் குழுக்களுக்கும் பொறுப்பு இருப்பதையும் மற்றும் அவர்கள் அதில் பங்கேற்பதையும் உறுதி செய்யுங்கள்
- மூலதனச் செலவு தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு முன் அதனை எப்படிப் புதுமையாகச் செய்யலாம் என்று யோசியுங்கள், மற்றும் செயல்பாடுகளை எளிமையாக்கவும் மற்றும் விரும்பும் வகையில் மாற்றியமைக்கவும் லீன் (Lean) முறைகளையும் மற்றும் ஊழியர்களின் செயல்முறை அறிவையும் பயன்படுத்துங்கள்
- செயல்பாட்டிலுள்ள மூலதனத்தை மேம்படுத்துவதற்கான முக்கியச் செயல்பாட்டு நிலைகாட்டிகளாக (KOIs) கையிருப்பு அளவு, நேர அளவுகள் மற்றும் பொருள்களின் போக்குவரத்து ஆகியவை அமைவதை உறுதிப்படுத்துங்கள்
- பிரச்னைகள் வரும்போது, அவற்றைத் தீர்ப்பதற்கு "நேரில் சென்று பாருங்கள்", செயல்முறைப் பிரச்னைகளை அலுவலகத்தில் அமர்ந்து தீர்க்க இயலாது

## கழிவுகள் மற்றும் வீணானவற்றை அகற்றுதல்

- லீன் (Lean) முறைகள் மற்றும் Mafact ஆகியவற்றைப் பயன்படுத்தி, ஒவ்வொரு செயல்முறையின் ஒவ்வொரு படிநிலையும் மதிப்பைக் கூட்டுவதாகவும் மற்றும் பிழைகளைக் குறைப்பதாகவும் அமைவதை உறுதிப்படுத்துங்கள்
- Mafact க்குள்ளே வேல்யூ ஸ்ட்ரீம் மேப்பிங் (VSM), தரப்படுத்தப்பட்ட வேலை, விரைவாக மாற்றுதல், காட்சிப்பூர்வமான மேலாண்மை, 5S, மற்றும் இதர லீன் (Lean) கருவிகள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி கழிவுகளை நீக்கவும்
- ஏழு வகையான கழிவுகள் - காத்திருத்தல், நகர்தல், பொருள்கள் நகர்தல், திருத்தங்கள், அதிக உற்பத்தி, கையிருப்பு மற்றும் செயலாக்கம் ஆகியவற்றை அடையாளம் கண்டு அவற்றை நீக்குவதில் கவனம் செலுத்துங்கள் மற்றும் செயல்திறன், கிடைக்கப்பெறும் இடவசதி, மற்றும் கையிருப்பு குறைப்பு ஆகியவற்றில் மேம்பாட்டை உருவாக்கப் பாடுபடுங்கள்.

## செயல்பாட்டுக்குக் கிடைத்தல்

- கருவிகள் தேவைப்படும்போது 100 சதவிகிதம் கிடைப்பதை உறுதிப்படுத்தவும் மற்றும் செயல் வல்லமையை மேம்படுத்தவும் மற்றும் பராமரிப்புச் செலவுகளைக் குறைக்கவும் ஒரு ஒட்டுமொத்த உற்பத்திப் பராமரிப்புத் திட்டத்தைப் பின்பற்றுங்கள்
- உற்பத்தி லைன்கள், அச்சுகள், வடிவங்கள் ஆகியவற்றின் மாற்றத்தில் எப்போதும் கவனம் செலுத்துங்கள்

## தகவல் தொடர்பு

- மரியாதையுடன், வெளிப்படையாக, நேர்மையாக மற்றும் சரியான நேரத்தில் விவரங்களைச் தெரிவியுங்கள்
- ஊழியர்களுக்கு வழிகாட்டவும் மற்றும் அவர்களுடன் திட்டங்கள், முன்னேற்றங்கள் மற்றும் தினசரி செயல்திறன் பற்றிய விவரங்களை பகிர்ந்துக்கொள்ளவும் உங்கள் துறையில் தொடர்ந்து கூட்டங்கள் நடைபெறுவதை உறுதி செய்யுங்கள்
- உங்கள் பகுதியில் உள்ள எல்லோருடனும் அடிக்கடி கலந்துரையாடுதல், திறந்த நிலை செயல்முறை மற்றும் இதர தகவல் தொடர்பு முறைகளின் மூலம் அவர்களுடைய கருத்துகளை பெறுவதை ஊக்கப்படுத்துங்கள்

## அங்கீகாரம் மற்றும் பரிசுகள்

- சிறப்பாகப் பணியாற்றிய குழுக்களையும் தனி நபர்களையும் அடையாளம் கண்டு பாராட்டுங்கள்
- செயல்பாட்டில் மேம்பாட்டைக் கொண்டுவரும் யோசனைகளைத் தரும் குழுக்கள் அல்லது தனி நபர்களுக்குப் பரிசுகளை வழங்குங்கள்

MAGNA

OPMTaIN201508